செ.வெ.எண்: 514 நாள்: 13.08.2019

**சுதந்திர தினவிழா அன்று நடைபெறும் கிராமசபைக் கூட்டங்களில் நியாயவிலைக் கடைகளின் கணக்குகள் சமூக தணிக்கைக்கு வைக்கப்பட உள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

சுதந்திர தினவிழா அன்று நடைபெறும் கிராமசபைக் கூட்டங்களில் நியாயவிலைக் கடைகளின் கணக்குகள் சமூக தணிக்கைக்கு வைக்கப்பட உள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

புதுக்கோட்டை மாவட்டத்தில் 15.08.2019 சுதந்திர தினவிழா அன்று அனைத்து ஊராட்சிகளிலும் கிராமசபைக் கூட்டங்கள் நடத்தப்பட உள்ளது. இந்த கிராம சபை கூட்டத்தில் பொது விநியோக திட்டத்தின் கீழ் உள்ள முன்னுரிமை குடும்ப அட்டை (PHH) பயனாளிகளின் பட்டியல் மற்றும் நியாயவிலைக் கடைகளின் கணக்குகளும் சமூக தணிக்கைக்கு வைக்கப்பட உள்ளது.

எனவே மேற்படி கிராமசபைக் கூட்டங்களில் பொதுமக்கள் கலந்து கொண்டு பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் தொடர்பான தங்கள் கருத்துக்களையும், குறைகளையும் தெரிவிக்கலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமா மகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**